வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை உச்சநீதிமன்றத்திலிருந்து பெற்றுத் தந்து –

# மாநில உரிமைக்கு வித்திட்ட முதலமைச்சருக்கு நெஞ்சார்ந்த நன்றி!

## சட்டப்பேரவையில் – அமைச்சர் எ.வ.வேலு நெகிழ்ச்சி!



**சென்னை, ஏப்.11-**

**சட்டப்பேரவையில் நேற்று முன்தினம் கேள்வி நேரத்தின் போது பேசிய பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் எ.வ.வேலு, "வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை உச்சநீதி மன்றத்திலிருந்து பெற்றுத்தந்து - மாநில உரிமைக்கு வித்திட்ட தமிழ்நாடு முதலமைச்சருக்கு நெஞ்சார்ந்த நன்றி!" என்று நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்டார்.**

சட்டப்பேரவையில் அமைச்சர் எ.வ.வேலு குறிப்பிட்டதாவது :-

ஏறத்தாழ 20 ஆண்டுகளுக்கும் மேலாக நான் கல்வித் துறையுடன் தொடர்புடையவன்.

தமிழ்நாட்டில் இருக்கிற தனியார் கல்லூரிகளினுடைய தாளாளர்கள், அதே போன்று, சுயநிதிக் கல்லூரிகளின் கூட்டமைப்பிலிருக்கிற மாநில நிர்வாகிகள், அதைத் தொடர்ந்து கல்லூரியில் பணியாற்றிக் கொண்டிருக்கிற பேராசிரியர்கள், முன்னாள் துணை வேந்தர்கள், நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் நேற்றையதினம் இரவு முழுவதும் என்னிடத்தில் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அவர்களுக்கு எங்கள் சார்பாக நீங்கள் நன்றி சொல்லுங்கள் என்று தொடர்ந்து எனக்கு போன் மூலமாக செய்திகளைச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு தீர்ப்பை உச்ச நீதிமன்றத்திலிருந்து தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அவர்கள் பெற்றிருக்கிறார்கள். அதற்காக எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம் என்று குறிப்பிட்டார்கள்.

குறிப்பாக, நேற்றையதினம் இரவு 900 மணிக்கு, ஒரு பேராசிரியர் அவர் பொலிட்டிகள் சையின்ஸ் படித்த ஒரு பேராசிரியர் சொன்னார், "அன்றைய முதலமைச்சராக இருந்த அண்ணன் கலைஞர் அவர்கள் மக்கள் பிரதிநிதிகளாக இருக்கிற முதலமைச்சர்கள் தான் கோட்டையில் கொடியேற்ற வேண்டுமென்று ஒன்றிய அரசாங்கத்திற்கு கடிதம் எழுதி, நேரடியாகப் பேசியதன் விளைவாகத் தான் இன்றைக்கு இந்தியாவிலிருக்கிற அத்தனை முதலமைச்சர்களும் கொடியேற்றுகிற அந்த வாய்ப்பை அவர்கள் பெற்றுத் தந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், இன்றைய தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருப்பவர், ஒன்றிய அரசு கொடுக்கத் தவறியதை, கொடுக்க மறுத்ததை, அந்தக் கல்வி உரிமையை உச்ச நீதிமன்றம் வரை சென்று, வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பை, மாநில உரிமைக்கு வித்திட்ட ஒரு தீர்ப்பை வாங்கித் தந்திருக்கிறார்கள். எனவே, எங்கள் அத்தனை பேர்களின் சார்பாக பேராசிரியர்கள், ஆசிரியர்கள், கல்லூரி மாணவர்கள், ஏன் தமிழ் மக்களின் சார்பாக கோடானு கோடி நன்றியை நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறோம்" என்று சொன்னார்கள். எனவே, அவர்களின் சார்பாக தமிழ்நாடு முதலமைச்சருக்கு, மாநில உரிமைக்கு வித்திட்டவருக்கு, நெஞ்சார்ந்த நன்றியை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு குறிப்பிட்டார்.

திருப்பூரில்

# சாயப்பட்டறை பொது சுத்திகரிப்பு நிலையம் கொண்டு வந்தது, கலைஞர் அரசு!

## சட்டப் பேரவையில் – அமைச்சர் மு.பெ.சாமிநாதன் விளக்கம்!



**சென்னை, ஏப். 11-**

**சட்டப் பேரவையில், மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் திருப்பூர் தொகுதி அ.தி.மு.க. உறுப்பினர் கே.என். விஜயகுமார் பேசியபோது குறுக்கிட்டு விளக்கமளித்த, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், "திருப்பூரில் சாயப்பட்டறை பொது சுத்திகரிப்பு நிலையம் கொண்டுவரப்பட்டது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சிக் காலத்தில்!" என்று விளக்கமளித்தார்.**

சட்டப் பேரவையில் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் குறிப்பிட்டதாவது:-

திருப்பூர் (வடக்கு) சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் K.N. விஜயகுமார் பொது சுத்திகரிப்பு நிலையம் பற்றி, அதாவது, சாயப் பட்டறையினுடைய பொது சுத்திகரிப்பு நிலையத்திற்கு தங்களுடைய ஆட்சியிலேதான் நிதி ஒதுக்கப்பட்டது என்று சொன்னார்கள். உறுப்பினர் அவர்கள் தவறான தகவலை இங்கே பதிவு செய்கிறார்கள். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இருக்கிறபோது மாநில அரசின்மூலம் 120 கோடி ரூபாயும், ஒன்றிய அரசின்மூலம், அன்றைக்கு மத்திய சென்னையினுடைய நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் அவர்கள் ஒன்றிய அரசில் அமைச்சராக இருந்தபோது, அவர்களும் அங்கே பேசி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய கோரிக்கையையும் ஏற்று, டாக்டர் மன்மோகன் சிங் அரசு ரூ.200 கோடியும் தந்தது. ஆக 320 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது.

முதலமைச்சர் அவர்கள் அன்றைக்கு துணை முதலமைச்சராக இருந்தார்கள். சிக்கண்ணா கல்லூரியில் பொது சுத்திகரிப்பு நிலையத்திற்கான வங்கிக்கான காசோலையை அனுப்பி வைக்கிற நிகழ்ச்சி நடைபெற்றது. அது உண்மை என்பதை நான் இந்த நேரத்திலே பதிவு செய்கிறேன். உறுப்பினர் அவர்கள் தவறான தகவலை இங்கே பதிவு செய்கிறார்கள்.

அதேபோல உறுப்பினர் அவர்கள் குடிநீர்ப் பிரச்சினையைப் பற்றி இங்கே சொன்னார்கள். குடிநீர்ப் பிரச்சினை மிக விரைவிலே சரியாகப் போகிறது. மேட்டுப்பாளையத்தில் பவானி ஆற்றின் குறுக்கே இன்னும் ஒரு தடுப்பணை பாக்கி இருக்கிறது. சமீபத்தில், நானும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் நேரிலே சென்று ஆய்வு செய்திருக்கிறோம். விரைவாக, தண்ணீர் வரத்து குறைந்தவுடன், அந்தப் பணியையும் செய்து, நிச்சயமாக, மூன்று நாட்களுக்கு ஒருமுறை குடிநீர் விநியோகம் திருப்பூரிலே நடைபெறும். இது உண்மை.

இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.



# தி.மு.க. இளைஞர் அணி

# இந்தித் திணிப்பு – நிதிப் பகிர்வில் பாரபட்சம் – தொகுதி மறுசீரமைப்பில் அநீதி

## ஒன்றிய அரசைக் கண்டித்து தொகுதிதோறும் பொதுக்கூட்டம்!

## கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், புதிய கல்விக்கொள்கை மூலம் இந்தியைத் திணிக்கும், நிதிநிலை அறிக்கையில், தமிழ்நாடு என்ற பெயரை முற்றிலுமாகப் புறக்கணித்து, நிதிப் பகிர்விலும் பாரபட்சம் காட்டும், தொகுதி மறுசீரமைப்பில் தமிழ்நாட்டை வஞ்சித்து, அநீதி இழைக்கும், ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையில், சட்டமன்றத் தொகுதிதோறும் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் முதன்மைப் பேச்சாளர் ஒருவர், இளம் பேச்சாளர் ஒருவர் என தொகுதிக்கு இரண்டு பேர் பேசவுள்ளனர். மாநில உரிமைகளுக்கு எதிராகச் செயல்படும் ஒன்றிய அரசைக் கண்டித்தும், 72–வது பிறந்தநாள் காணும் மாண்புமிகு கழகத் தலைவர் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள் குறித்தும், எளிய மக்களுக்குப் புரியும் வகையில், விளக்கிப் பேசுவார்கள்.

மக்களுக்கு விழிப்பு உணர்வூட்டும் வகையில், அன்பகத்தில் தயாரிக்கப்பட்டுள்ள துண்டறிக்கையை, தொகுதி மக்களுக்கு வீடு வீடாகச் சென்று விநியோகித்து, அவர்களை இக்கூட்டத்தில் பங்கேற்கச் செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தமிழ் மக்களின் உரிமைக்குக் குரல் எழுப்பிடும் வகையிலும், உரிமையைத் தர மறுக்கும் ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையிலும், இந்தப் பொதுக்கூட்டங்களை எழுச்சியுடன் நடத்துமாறு, இளைஞர் அணி நிர்வாகிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

| வ. எண் | நாள் | கழக மாவட்டம் | சட்டமன்றத் தொகுதி | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | 11.04.2025 | கடலூர் கிழக்கு | கடலூர் | கடலூர் | **திருச்சி சிவா** எம்.பி., கு.அஷ்வின் |
| 2 | 12.04.2025 | நாமக்கல் மேற்கு | திருச்செங்கோடு | தேவனாங்குறிச்சி | பேராசிரியர் **சுப.வீரபாண்டியன்,** க.நந்தகுமார் |
| 3 | 12.04.2025 | கரூர் | குளித்தலை | தோகைமலை | செந்தில்வேல், வே.குணஸ்ரீ |
| 4 | 12.04.2025 | கள்ளக்குறிச்சி தெற்கு | கள்ளக்குறிச்சி | வானவரெட்டி ஊராட்சி | சூர்யா கிருஷ்ணமூர்த்தி, ஆ.ஷர்மிளா |
| 5 | 12.04.2025 | கன்னியாகுமரி மேற்கு | கிள்ளியூர் | நித்திரவிளை சந்திப்பு | இந்திராகுமார் தேரடி, ஜெ.ஜெபின் |
| 6 | 12.04.2025 | இராமநாதபுரம் | திருவாடனை | அண்ணா திடல், ஆர்.எஸ்.மங்கலம் | உமா, ரா.யோவான் மனுவேல்ராஜ் |
| 7 | 13.04.2025 | ஈரோடு வடக்கு | பவானி சாகர் | அரியப்பம்பாளையம் | எழுத்தாளர் வே.மதிமாறன், மு.கௌரி மனோகரி |
| 8 | 15.04.2025 | கள்ளக்குறிச்சி தெற்கு | ரிஷிவந்தியம் | மேல் சிறுவளூர் கூட்டு ரோடு | வழக்கறிஞர் சே.மெ.மதிவதனி, ச.ஐஸ்வர்யா |
| 9 | 19.04.2025 | புதுக்கோட்டை வடக்கு | கந்தர்வக்கோட்டை | பேருந்து நிலையம் அருகில் | தமிழ் கா.அமுதரசன், இ.நேரு |
| 10 | 19.04.2025 | கடலூர் கிழக்கு | புவனகிரி | கம்மாபுரம் | எழுத்தாளர் வே.மதிமாறன், ர.கோமதி |
| 11 | 19.04.2025 | திருச்சி வடக்கு | முசிறி | கைகாட்டி, பரிசில் துறை ரோடு | செந்தில்வேல், ம.சையது முஷரப் |
| 12 | 20.04.2025 | கடலூர் கிழக்கு | குறிஞ்சிப்பாடி | குள்ளஞ்சாவடி | வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா, நா.சத்தியப்பிரியன் |
| 13 | 26.04.2025 | கடலூர் கிழக்கு | சிதம்பரம் | பரங்கிப்பேட்டை | **நாஞ்சில் சம்பத்,** க.செல்வமணி |
| 14 | 27.04.2025 | கடலூர் கிழக்கு | காட்டுமன்னார்கோயில் | திருமுட்டம் | வழக்கறிஞர் ராஜீவ் காந்தி, க.தமிழ்மணி |

அன்பகம், சென்னை – 18.
நாள் : 09–04–2025.

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி